# தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் கூறுகள்

தொகுதி – II



பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. கலாவதி

முனைவர் சு. குமரன்

**தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் கூறுகள்**

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**

| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. கலாவதி**<br>**முனைவர் சு. குமரன்** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | நவம்பர், 2016 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்**<br>**மகளிர் உயர்கல்வி நிறுவனம்**<br>கோயம்புத்தூர் – 43. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் – 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் – 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | 18 + 418 = 436 |
| விலை | : | உரூ. 300/- |

**ISBN : 978 - 93 - 85267 - 13 - 0**

**Aspects of prosperous Life in Tamil Literature**
**International Conference**

| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. G. Galavathi**<br>**Dr. S. Kumaran** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | November, 2016 |
| Published | : | **Department of Tamil**<br>**Avinashilingam Institute for Home**<br>**Science and Higher Education for**<br>**Women,** Coimbatore - 43. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | 18 + 418 = 436 |
| Prize | : | **Rs. 300/-** |

# பொருளடக்கம்


81. **முனைவர் ம. இராமலட்சுமி** 403
குறுந்தொகை மருதத் திணையில் ஊடல்

82. **மு. ஜெயலட்சுமி** 409
அகநானூற்றில் வரகு

83. **அ. தனலட்சுமி** 413
திருக்குற்றாலக் குறவஞ்சி காட்டும் வாழ்வியல்

84. **முனைவர் கி. மலர்விழி** 418
அசோகமித்திரனின் 'விடிவதற்குள்' சிறுகதை உணர்த்தும் வாழ்வியல் எதார்த்தம்

85. **வை. காயத்ரி** 422
தமிழர் மரபில் இயற்கையின் பதிவுகள்

86. **முனைவர் க. முருகேசன்** 428
ஔவை சு. துரைசாமிப்பிள்ளையின் புறப்பாடல் உரைத்திறன்

87. **முனைவர் இரா. மணிமேகலை** 434
வேளாளர் புராணத்தில் ஏர்ப்படலம் காட்டும் வேளாண் நுட்பங்கள்

88. **முனைவர் சு. சதீஷ்குமார்** 439
வாகீசர் வாக்கில் வாழ்வியல் கூறுகள்

89. **கு. அரிகரசுதன்** 445
இலக்கியங்களில் விருந்தோம்பலின் மாண்புகள்

90. **முனைவர் ர. காளீஸ்வரி** 450
மணிமேகலையில் அறக்கோட்பாடு

91. **முனைவர் த. நாகம்மாள்** 455
நாட்டுப்புற இலக்கியத்தில் தெய்வ வழிபாட்டு முறைகள்

92. **முனைவர் வ. பிரேமலா பிரியதர்சினி & நா. ராஜேஸ்வரி** 459
சங்க இலக்கியத்தில் சிறுதானியத்தின் பயன்பாடு

93. **முனைவர் க. கிருத்திகா** 464
பெரியபுராணம் வழி வெளிப்படும் வாழ்வியல்

94. **சு. ருக்குமணி** 469
பட்டினப்பாலையில் புலப்படும் வாழ்வியல் சிந்தனைகள்

95. **முனைவர் ப. நந்தினி** 473
பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களில் மனித வாழ்வியல் கூறுகள்

# 88. வாகீசர் வாக்கில் வாழ்வியல் கூறுகள்

**முனைவர் சு. சதீஷ்குமார்**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர் - 641 029.*

## முன்னுரை

மனிதப் பிறப்பெடுத்த ஒவ்வொருவரும் சிறந்த அறக்கருத்துக்களை வாழ்வியல் நெறியாகக் கொண்டு வாழ்தல் வேண்டும். வாகீசர் என்று பெயர் பெற்ற திருநாவுக்கரசர் வாழ்வியல் துன்பங்களிலிருந்து பிறழாத சமுதாயத்தைக் காண விரும்பினார். தாம் வாழ விழைந்த சமுதாயத்தை அவர் பாடிய தேவாரத் திருப்பாக்களில் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார். சமுதாயத்தை நன்னெறிப் படுத்துவதற்கான வாழ்வியல் நெறிகளை எடுத்துரைத்த நாவுக்கரசர் தாமும் அவ்வழியே நடந்து காட்டினார். அவர்தம் வண்டமிழ்ப் பாக்களில் இடம்பெற்றுள்ள வாழ்வியல் கூறுகளை எடுத்துரைக்கும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

## அகப்பகை அறுத்தல்

இவ்வுலகில் வாழும் மனிதருக்கு இருவகையான பகைகள் இருத்தல் இயல்பு. அவற்றுள் பகைவர்களால் ஏற்படுவது புறப்பகை எனப்படும். இது காட்சிக்குப் புலனாவது. மற்றொன்று அகப்பகை, இது ஒருவன் உள்ளத்தில் நிலைகொண்டு மெய்யுணர்வைத் தடுக்கும். காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் ஆகிய ஆறும் அகப்பகை எனப் பெயர் பெறும். நாடாளும் வேந்தனுக்கு இருக்கலாகாத குற்றங்களாக இவ் ஆறையும் வள்ளுவர் (குறள். [illegible]) குறிப்பிட்டுள்ளார்.

அகப்பகைகளாகிய ஆறும் தீவினைக்குக் காரணமாக அமைகின்றன. தீவினையின் பயனாக உயிர் வீடுபேற்றை அடைய இயலாமல் மீண்டும் இவ்வுலகில் பிறக்கிறது. இதனை உணர்ந்த திருநாவுக்கரசர் அகப்பகையைப் போக்கிய உன் அடிமையான அடியனைப் பிறவிப் பிணியிலிருந்து காத்தருள வேண்டும் எனத் திருவாரூர்ப் பெருமானிடம் மனமுருகி வேண்டுகின்றார். இதனை,

*"பிறத்தலும்பிறந் தாற்பிணிப்பட வாய்ந்தசைந் துட*
*லம்பு குந்துநின்*
*றிறக்குமா றுளதே*
*யிழித்தேன் பிறப்பினைநான்*
*அறத்தையேபுரிந்த மனத்தனா யார்வச்செற்றக்*